
# சிறப்பிதழ்



“வல்லமை தாராயோ,- இந்த
மாநிலம் பயனுற வாழ்வதற்கே?
சொல்லடி சிவசக்தி!- நிலச்
சுமையென வாழ்ந்திடப் புரிகுவையோ?”

-

மகாகவி.சுப்ரமணியபாரதியார்-

அன்புச் சிறுவர் சிறுமியரே!

சிறுவர் அமுதம்

உங்களுக்காக உங்களின் தமிழ் அறிவை வளர்ப்பதற்காக உண்டாக்கப் பட்டது. வெறுமே கையெழுத்துப் பிரதியாகத் தொடக்கத்தில் வந்த இவ்விதழ் அச்சுயந்திரத்திற்கு மாறித் தற்போது கணணிப் பதிப்பில் வெளி வருகின்றது.

இதழின் தொடக்கதாரரும் ஆசிரியருமான திரு.சின்னராஜேஸ்வரனின் மறைவுக்குப் பின், இதழை நிறுத்தி விட எண்ணிய வேளையில் ஆசிரியரின் நண்பர்களினதும், உங்களின் ஊக்குவிப்பாலும் சிறுவர் அமுதம் தொடர்ந்து பத்தாண்டு நிறைவெய்துகின்றது.

1994ஆம் ஆண்டு 8ம் மாதத்தில் இருந்து இதன் ஆசிரியப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட வேளையில் இதை எப்படி நடத்தப் போகிறோம் என்றிருந்த வேளையில், எங்களுக்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் தந்தவர்களுக்கு எங்களின் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். பத்தாண்டு நிறைவைச் சந்தோஷமாகக் கொண்டாட வேண்டும். நிறைவு மனத்திலும் வேண்டும்.

இந்த ஆண்டுடன் தன் மாத இதழ்களை மூடிக் கொள்ளும் சிறுவர்அமுதம் அடுத்த ஆண்டிலிருந்து ஆண்டுக்கு ஒன்றாக வெளி வரும் என்பதை அறியத் தருகின்றோம். பத்தாவது அண்டுச் சிறப்பிதழில் முதலாவது இதழில் ஆசிரியரின் எண்ணத்திலிருந்து தொடங்கி ஒவ்வொரு ஆண்டிலிருந்தும் வந்த கதைகளைத் தொகுத்து (90-99வரை) வெளிவந்த கதைகள் சிலவற்றைத் தொகுத்துத் தந்திருக்கிறோம்.

நன்றியுடன்,
ஆசிரியை.

14.1.90 இதழிலிருந்து..........

# எமது எண்ணம்

சிறுவர்களுக்குக் கதை என்றால் மிகவும் சந்தோசமாயிருக்கும். கதை கேட்பது என்றாலே மிகவும் பொறுமையாயிருந்து கேட்பார்கள். ஆனால், கதை சொல்கின்ற ஒருவரை எதிர்பார்த்துக் காத்திருக்க வேண்டும். கதைகளை ஆட்கள் தான் சொல்ல-வேண்டும் என்றில்லை. புத்தக ஏடுகளும், வீடியோ நாடாக்களும் கதை சொல்ல-லாம். புத்தக ஏடுகள் கதைகளைச்-சொல்லச் சிறுவர்கள் கேட்கின்ற போது, சிறுவர்களின் வாசிப்புப் பழக்கத்தில் பயிற்சியும், மொழிவளமும் ஏற்படுகின்றது.

எனவேதான், அந்நிய நாடுகளில் வீட்டுக்குள் சிறைப்பட்டு, அதனால்...

டீவீக்களுடனும், விசேடமான சினிமாக்-
களுடனும், காலங்களைக் கடத்திக்-
கொண்டிருக்கும் எமது தமிழ்ச் சிறுவர்-
களினது எதிர்கால நலனில் கொண்ட
அக்கறையின் வெளிப்பாடாகவே,
இச் சிறுவர் அமுதம் வெளிவருகின்றது.

அந்நிய நாடுகளில் எத்தனையோ ஏடுகள் வெளிவந்து கொண்டிருக்கின்றன சிறுவர்களுக்கான புத்தகம் ஒன்றில்லை என்ற குறையையும் " சிறுவர் அமுதம்" நீக்குகின்றது. இது முழுக்க முழுக்கச் சிறுவர் இலக்கியமாகவே வெளிவரும், என்பதை உறுதியுடன் தெரிவிக்கின்றோம்.


உங்களிடமிருந்து, ஆக்கங்கள் ஆலோசனைகள், அறிவுரைகள், விமர்சனங்கள் போன்றவற்றை எதிர்பார்க்கின்றோம். உங்களது விமர்சனங்களும், ஆலோசனைகளும் அடுத்த சிறுவர் அமுதங்களை வளம்படுத்தும் என நம்புகின்றோம்

அன்புடன்

ஆசிரியர்:-

19.1.99 இதழிலிருந்து..........................

# கண்பார்வை.



அந்தக் குக்கிராமத்தில் ஒரு ஏழைப்பெண் இருந்தாள். கூலி வேலை செய்து தன் குழந்தையைக் காப்பாற்றி வந்தாள் அந்த ஏழைத்தாய். அவள் ஒரு பாவம். அவளின் மகனான மார்ட்டினுக்குக் கண் பார்வையில்லை. தாயின் மூலமாகத் தான் அவனுக்கு உலகம் தெரிந்தது. அம்மா அவனுக்குப் பல கதைகள் சொல்லுவாள். மிருகம் பறவைக் கதைகள், ராஜா ராணிக் கதைகள் இப்படி நிறைய அவன் தாயிடமிருந்து கேட்பான்.

எல்லாக் கதைகளிலும் குதிரை வர வேண்டும். இல்லாவிட்டால் அவனுக்கு வருத்தமாக இருக்கும்.

அம்மாவும் அதற்காக அவனுக்குப் பல கதைகள் சொல்வாள். எல்லாவற்றிலும் குதிரை வரும். அவன் மனத்திரையில் குதிரை உலவி வரும். அவன் வாய் திறந்தபடி கேட்டுக் கொண்டிருப்பான். ஒருநாள் அம்மாவிடம் "அம்மா நான் ஒருதரமாவது குதிரையைப் பார்ப்பேனா?" என்று ஆவலுடன் கேட்டான். அம்மாவுக்கோ அழுகைஅழுகையாக வந்தது. ஆனால் அழுகையை அடக்கிக் கொண்டாள்.

ஒரு வீட்டில் வேலை செய்யச் சென்றபோது, கண் மருத்துவரைப் பற்றிக் கேள்விப்பட்டாள். அவரிடம் சென்று மகன் மார்ட்டினைக் காட்டினாள். மார்ட்டினைப் பரிசோதித்த மருத்தவர் அறுவைச் சிகிச்சை மூலம் மார்ட்டினுக்குக் கண் பார்வை கிடைக்கும். அதற்காக பணம் நிறைய வேண்டும் என்றும் மருத்துவர் நம்பிக்கை தெரிவித்தார். ஏழைத்தாயால் என்ன செய்து விட முடியும்? அவள் யாரிடம் சென்று பணம் பெற முடியும்? யார் கொடுப்பார்கள்?. அன்றாட வாழ்க்கைக்கே கஷ்டப்படும் அவள் கடனை எப்படித் திருப்பிக் கொடுப்பாள்?.

அவள் மருத்துவரிடமே சென்றாள். "ஐயா, நான் ஏழை. உங்களுக்குப் பணம் தரக் கூடிய நிலையில் நான் இல்லை. என் மகனுக்குப் பார்வையைப் பெற்றுக் கொடுங்கள். என் வாழ்நாள் வரைக்கும் உங்களுக்குச் சம்பளம் இல்லாத வேலைகாரியாக நான் இருக்கிறேன்." என்று மன்றாட்டமாகக் கேட்டாள். மருத்துவருக்கும் இரக்கமாக இருந்தது. மார்ட்டினுக்கு அறுவைச் சிகிச்சை செய்ய ஒப்புக் கொண்டார்.

அறுவைச் சிகிச்சை மூலம் மார்ட்டின் கண்பார்வை பெற்றுக் கொண்டான். பார்வை கிடைத்ததும் அம்மா அவனுக்குக் குதிரைப்பொம்மை பரிசாகக் கொடுத்தாள். அவன் உலகத்தைப் பார்த்தான். கடினமான தன் உழைப்பினால் மருத்துவரின் கடனை அடைத்து விட வேண்டும் என்று அம்மா முயற்சித்தாள். மனிததெய்வமான அந்த மருத்துவர் அடுத்த மாதத்திலேயே இறந்து போய் விட்டார். அது மட்டுமல்ல, அவரது உறுதிப் பத்திரத்திலும் "தனக்கு யாரும் கடனாளி இல்லை" என்றும் மருத்துவர் எழுதி விட்டிருந்தார்.

மார்ட்டின் பெரியவனானான். புகழ் பெற்ற எழுத்தாளன் ஆனான். உலகப்புகழ் பெற்ற "றீடேர்ஸ் டைஜஸ்ற்" என்ற ஆங்கில மாத புத்தகத்தில் அவனது படைப்புக்கள் தொடர்ந்து வெளிவந்தது. அதற்காக அவனுக்குப் பெரிதான தொகைப்பணத்தை புத்தகத்தை வெளியிட்டவர்கள் சம்பளமாகக் கொடுத்து வந்தனர். காலம் கடந்து விட்டபோதும் மார்ட்டின் தனக்குக் கண் பார்வை தந்த மருத்துவரை மறக்கவில்லை. அந்தப் புத்தகத்தை வெளியீட்டாளர்கள் நடத்தி வந்த "கண் பார்வையற்றோர் சங்கத்துக்குத் தனது சம்பளத்தின் கூடுதல் பகுதியை அளித்தான்.

மார்ட்டின் செய்த நன்கொடையை இன்றும் உலகம் வியந்து போற்றுகின்றது.

19.4.98 இதழிலிருந்து......................

## *சின்ன வயதிலே......*



அது வசந்த காலம். மரத்தில் குருவி ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் அதைப் பிடிக்க எண்ணினார்கள். அவர்களில் ஒரு சிறுவன் மெல்ல மரத்தில் ஏறிக் குருவியைப் பிடித்துக் கொண்டான். அப்பொழுதில் இருந்தே குருவி பிடிப்பது அவனுக்குரிய விருப்பப்பட்ட தொழிலாகி விட்டது. விளையாட்டாகி விட்டது.

பறவைகளை வளர்க்க விரும்பும் சிறுவர்கள் அவன் மூலமாகத் தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து வந்தனர். பறவைகளைப் பிடிப்பதையோ, அல்லது குஞ்சுகளைப் பிடிப்பதையோ அவன் பாவமாக எண்ணியதில்லை. பிரிந்து அவை கஷ்டப்படுவதையோ அவன் பொருட்படுத்துவதில்லை. அவனைப் பொறுத்தவரை அது அவனது பொழுதுபோக்கு, அவ்வளவே.

ஒரு நாள் பறவை பிடிக்கச் சென்றபோது, அழகிய பறவையைக் கண்டான். அதைத் தான் வைத்திருக்கவும் நினைத்தான். அதற்காகக் கூண்டு ஒன்றை வாங்கினான். அப்பறவையைப் பிடித்துக்

கூண்டில் அடைத்துக் கொண்டான். அதைத் தானே வைத்துக் கொண்டான். ஒருநாள் சிறுவன் தன் நண்பர்களுடன் விளையாடச் சென்றான். கூண்டுப்பறவைக்கு உணவு வைக்க மறந்து விட்டான். அவன் வீட்டுக்கு வந்தபோது பறவை இறந்து விட்டது.


அவன் மிகவும் வேதனைப்பட்டான். அவனது வீட்டுப் பெரியவர்கள் அவனைக் கடிந்து கொண்டனர். அவனுக்கு அழுகைஅழுகையாக வந்தது. வேதனையோடு "இனி நான் எந்தப் பறவையையும் நான் பிடிக்கவோ, கூண்டில் அடைக்கவோ மாட்டேன்." என்று உறுதியாகக் கூறினான். அன்று முதல் அவன் பறவைகளைப் பிடிப்பதையே விட்டுவிட்டான்.

அது மட்டுமா! வீதிகளில் கூண்டுப் பறவைகளை விற்பனை செய்பவர்களைக் கண்டால், அவர்களிடம் விலைக்கு வாங்கி விடுதலை செய்து வந்தான். சிறுவன் பெரியவனானான். நாட்டின் சக்கரவர்த்தி கூண்டுப் பறவைகளைப் போல மக்களை நடத்தி வருவதைக் கண்டு வேதனைப்பட்டான். மக்களைத் தன் போதனைகளின் மூலம் புரட்சி செய்து, சக்கரவர்த்தியின் கொடுங்கோல் ஆட்சியில் இருந்து காப்பாற்றினான்.

அவன் யார் என்று நினைக்கிறீர்கள்?. உலகம் போற்றும் மக்கள் தலைவன் லெனின் தான் அவன்.

19.11.97 இதழிலிருந்து........................

# சின்னக் குருவி பறக்கிறது.....



சின்னக் குருவி பறக்கிறது
சிறகைக் காற்றில் உதைக்கிறது
திண்ணைக் குந்தில் இருக்கின்றேன்
திரும்பிப் பார்த்துச் சிரிக்கிறது

வெய்யில் நன்றாய் எறிக்கிறது
வெளியில் பயறு காய்கிறது

மையக் குருவி வருகிறது
  பயற்றுப் பாயை அடைகிறது

என்னைப் பார்த்துக் கதைக்கிறது
  ஏதோ கேள்வி கேட்கிறது
இன்னும் நாங்கள் பழகாத
  இனிய சொற்கள் சொல்கிறது

பயறு வேண்டும் என்கிறதோ?
  பசிக்கிறது பார் என்கிறதோ?
வயிறு சிறிய தானாலும்
  வருத்தம் பெரிது என்கிறதோ?

பஞ்சம் வந்து சேர்ந்திடுமோ!
  பத்துப் பயறு வீசுவதால்?
கொஞ்சம் கிள்ளி எறிகின்றேன்
  கொத்திக் கொத்தித் தின்கிறது

பிறகு நிமிர்ந்து சிரிக்கிறது
  பின்னால் திரும்பிப் பார்க்கிறது
சிறகைக் காற்றில் உதைக்கிறது
  சின்னக் குருவி பறக்கிறது!

ஈழத்துக் கவிஞர் அமரர் மஹாகவியின் பாடலை அம்மா சொல்ல எழுதி அனுப்பியவர் பி.அங்கதன்.

19.1.95 இதழிலிருந்து.........................

## சுறா(Hai)

---------

பிள்ளைகளே!சுறா ஒரு மீன் என நீங்கள் எண்ணாதீர்கள். அது மிகவும் பழமை வாய்ந்த, கடலில் வாழும் ஒரு கடல் விலங்காகும். கிட்டத்தட்ட 300 மில்லியன் வருடங்களுக்கு முன் முதல் சுறா வாழ்ந்தது. முதலாவது சுறா வாழ்ந்த காலம், Dinosaurier வாழ்ந்த காலமாகும். இன்று வாழ்கின்ற சுறா, முதல் வாழ்ந்த சுறாவையே பெரிதும் ஒத்துளது. இன்று சுறாவில் கிட்டத்தட்ட 350 வகைகள் காணப்படுகின்றன.

மீன்களின் எலும்புக்கூட்டமைப்பு மனிதர்களின் எலும்புக்கூட்டமைப்பை ஒத்தன. மனிதர்களின் உடலசைவுக்கு எப்படி எலும்புக்கூடு உதவுகின்றதோ அதே போலவே மீன்களின் அசைவுகளுக்கு எலும்புக்கூடு உதவுகின்றது. இதனால் பொதுவாக மீன்களை எலும்பு மீன்கள் என்பர். ஆனால் சுறாக்களுக்கு உடலில் எலும்புகளே இல்லை. அதன் உடல் உறுதியான இணக்கமுள்ள சவ்வு, தடிப்பமான மீள்இசைவுச்சக்தியுடைய மூலகங்களால் ஆன சவ்வு எலும்புகளே உள. எலும்புகள் செய்யும் செயலை இச்சவ்வுகளே செய்கின்றன. ஒரு சில சுறாக்களுக்கு வழுவழுப்பான முப்படைச் சவ்வுகள் கண்ணிமை

போன்றுள. ஒன்று மேல் மடல். மற்றது கீழ் மடல். மூன்றாவது கண்ணை முழுமையாக மூடும் மடல்.

மீன்கள் நீந்தாது நிற்கும் போது வாயு நிறைந்த நீர்க்குமிழ்களை வெளிவிடுகின்றன. ஆனால் சுறாக்கள் நீந்தாது நிற்கும் போது நீர்க்குமிழ்களை வெளிவிடுவதில்லை.

பெரும்பாலான மீன்களுக்கு முன் பக்கச் செட்டை நன்றாக வளைந்து கொடுக்கக் கூடியதாக அமைந்திருப்பதனால் எல்லாப் பக்கமும் இலகுவாக அசையக் கூடியதாக இருக்கின்றது. ஆனால் சுறாவின் அசைவு வரையறுக்கப்பட்டதாக உள்ளது. காரணம் சுறா நெஞ்சுச் செட்டையே நீந்துவதற்கு பயன்படுகிறது. இச் செட்டை மிகவும் கடினமான இறுக்கமான சவ்வினால் ஆக்கப்பட்டது. அத்துடன் இச் செட்டை கூர்மையான விளிம்பை உடையது.


மற்றைய மீன்களை விட சுறா தன் இரையை கஸ்டமில்லாமல் பிடிக்கிறது. இருட்டுவேளையிலும் தான் பிடிக்கும் இரை எப்படிப்பட்டது (அவ்விரை காயப்பட்டதா? அல்லது புதியதா? )என அறியும் தன்மை உண்டு. இரை மண்ணினுள் புதைந்திருந்தாலும் கூட அதனை இலகுவாக அடையாளம் கண்டு கொள்ளும். இதன் கண் ஒளிர்வுடையது. இதனால் கும்மிருட்டிலும் கூட தன் இரையைக் கண்டுகொள்ள முடிகின்றது. இது கண்டபடி எல்லாவற்றையும் தன் இரைக்காக

பிடித்துச் சாப்பிடும் விலங்கு அல்ல. வெள்ளைச் சுறா அதிகளவு இரையை உண்ணுகின்றது.

பொதுவாக சகல மீன்களும் சுவாசத்தின் போது பலம் குறைந்த மின்னலைகளை வெளிவிடுகின்றன. ஒரு சில சுறாக்கள் வலிய மின்னலைகளை வெளியிடுகின்றன. இவை மற்றைய மீன்கள் விடும் மென்மின்னலையை உறிஞ்சககூடியன. இப்படி உறிஞ்சுவதன் மூலமே சுறா தன் இரை எங்கே இருக்கிறது? அது எப்படிப்பட்டது? என அறிந்து கொள்ளுகின்றது. ஒரு சில சுறா வகைகள் ஒரு வகை மணத்தை வெளியிடுவதன் மூலமும் தம் இரையைப் பிடிக்கின்றன. Hammerhai எனும் சுறாவின் முதுகின் மேற்றோலில் ஒரு நீள் கோட்டிற்கு மிகச் சிறிய ஓட்டைகள் காணப்படுகின்றன. கடலில் ஏற்படுகின்ற மிகமிகச் சிறிய அசைவுகள்கூட சுறாவின் தோலில் உள்ள இச்சிறிய ஓட்டைகளில் அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன. இதன் மூலம் இச்சுறா தன் இரையை அறிந்துகொள்ளுகின்றது.

சுறாக்களின் உடலிலே ஈரலே பெரிய உறுப்பாகும். இது கிட்டத்தட்ட 840 கிலோக்கிறாம் நிறையை உடையது. இவ் ஈரல் இருந்து கிட்டத்தட்ட 2200லீற்றர் எண்ணை எடுக்கலாம். இது உயிர்ச்சத்து A நிறைந்ததாகும்.

பெரும்பாலான சுறாக்கள் குட்டியே ஈனுகின்றன.குட்டியின் நீளம் 10–15 சென்ரி மீற்றர்.




Ammen haie எனும் சுறா ஒரு முறையில் 20–30 குட்டிகள் வரை ஈனுகின்றது. ஒரு குட்டியின் நீளம் 30சென்ரி மீற்றர். Tiger haie எனும் சுறா ஒரு முறையில் 80 குட்டிகள் ஈனுகின்றது. Weiss haie எனும் சுறாக் குட்டியின் நீளம் 137 சென்ரி மீற்றர் ஆகும். சில சுறாக்கள் முட்டையிட்டு குஞ்சுகள் பொரிக்கின்றன.

சுறாவின் குடல்தோலினைக் கொண்டு ஆச்சரியப்படக் கூடிய வகையில் பலவகை ஆடைகள் தயாரிக்க அறிந்துள்ளார்கள்.

(இவ் விபரங்கள் யாவும் Faszintion Tier எனும் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டன.)

—கபிலன் [illegible]ம்.—

❁சகாராப் பாலைவனத்திலுள்ள "திடிகெல்ட்" நகரத்தில் ஒருமுறை மழை பெய்தால் பத்து வருடங்களுக்குப் பின்பே அடுத்த மழை பெய்யுமாம்.




கிராமத்துத் தோட்டவெளியில் ஒரு முதியவரும் இளைஞனும் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தனர். துலாவில் இளைஞன் நின்று மிதிக்க முதியவர் துலாக்கொடியைப் பிடித்துத் தண்ணீர் இறைத்துக் கொண்டிருந்தனர். வழியால் ஒருவர் நடந்து வந்தார். தண்ணீர் இறைப்பதை நின்று பார்த்து விட்டு ''நகரங்களில் மாடுகள் மூலமாகவும் மின்சாரம் மூலமாகவும் இலகுவாகத் தண்ணீரை இறைக்கின்றார்கள். நீங்கள் ஏன் இன்னும் இந்தப் பழைய முறையிலே இறைக்கின்றீர்கள்?. மனிதசக்தியை வீணாக்குகின்றீர்கள்''. என்று சொன்னார்.

அதற்குத் துலாக்கொடியைப் பிடித்துக் கொண்டிருந்த முதியவர் ''மெல்லமாகப் பேசும். இவை எல்லாம் எனது மகனின் காதில் விழுந்து விடப் போகின்றது. இன்னும் சிறிது நேரத்தில் மகன் சாப்பிட வீட்டிற்குப் போய்விடுவான். பிறகு இருவரும் ஆறுதலாகப் பேசுவோம். இப்போ போய் வாருங்கள்''. என்று சொல்லியனுப்பினார்.

பேச்சுக் கொடுத்தவருக்கு ஆச்சரியமாக இருந்தது. சிறிது நேரத்தில் துலாவை மிதித்துக் கொண்டிருந்த மகன் சாப்பிட வீட்டிற்குச் சென்றான். வழியால் நடந்து வந்தவர் பேச்சுக் கொடுக்கத் தொடங்கினார்.

''நான் சொன்னது உங்களுடைய நன்மைக்காகத்தானே? இதை ஏன் உங்கள் மகனுக்குக் கேட்கக் கூடாது என்று சொன்னீர்கள்?'' என்று கேட்டார். அதற்கு அந்த முதியவர் ''ஐயா எனக்கு எண்பது வயதாகின்றது. இருந்தாலும் என்னால் இன்றும் வயலில் இறங்கி எந்த வேலையும் செய்ய முடிகின்றது. நாங்கள் மாடுகளைப் பயன்படுத்தியோ மின்சாரம் மூலமோ நீரை இறைக்கலாம் என்பது எனக்குத் தெரியாமலில்லை. அப்படி நாங்கள் செய்தால் எனது மகன் எண்பது வயதாகும் போது பெரிய நோயாளி ஆகிடுவான். அதுதான் காரணம்'' என்று சொன்னார்.

கிராமங்களில் வாழுகின்ற நாங்கள் அதிககாலம் வாழ்வதும், எண்பது வயதிலும் எங்களால் உழைக்க முடிகின்றதென்றால் எமது உழைப்புத் தான் காரணம். இதையும் விஞ்ஞானம் கெடுக்க வந்து கொண்டிருக்கின்றது. இதை நினைக்கத் தான் கவலையாயிருக்கின்றது என்றும் தொடர்ந்து சொன்னார். வந்தவர் ''ஐயா தெரியாமற் சொல்லிவிட்டேன் என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்'' என்று சொல்லிச் சென்றார்.

19.3.99 இதழிலிருந்து....................

# அகந்தை



அருச்சுனனும் கண்ணனும் மைத்துனர்கள். நண்பர்களும் கூட. அருச்சுனன் கண்ணனோடு ஒன்றாகச் சந்தித்து உரையாடினார்கள். அப்போது திடீரென அருச்சுனன் மௌனமானான். அப்போது கண்ணன், "அருச்சுனா! என்ன திடீரென்று யோசனையில் ஆழ்ந்து விட்டாய்?" என்று அருச்சுனனைப் பார்த்துக் கேட்டான்.

அருச்சுனன் கண்ணனிடம், "கண்ணா, இராமனை எல்லோரும் கோதண்டம் என்னும் பெரிய வில்லை வளைத்த வில்லாளி என்று சொல்லுகிறார்கள். அப்படிப்பட்ட பெரியவீரன் ஏன் இலங்கைக்குச்

செல்லும் வேளையில் குரங்குகளைக் கொண்டு மண்ணால் அணை கட்டினான். நானானால் அம்பினாலேயே அணை கட்டியிருப்பேன்." என்று கூறினான்.

கண்ணன் அருச்சுனனைப் பார்த்து மெல்லப் புன்னகைத்தவாறே "அருச்சுனா, எனக்கும் கூட அவனது செயல் திறமையானதாகத் தெரியவில்லை. நீ திறமையான வில்லாளி. ஐமுனை நதியில் மேல் உன் அம்புகளால் பாலம் அமை பார்க்கலாம்." என்றான். அருச்சுனனும் ஐமுனை நதியின் மேல் அம்புகளால் பாலம் அமைத்தான். "அடடா, அற்புதம்! அற்புதம்! கண்ணன் பாராட்டினான்.

பின் "அருச்சுனா! இப்பாலத்தின் உறுதியைப் பரீட்சித்துப் பார்க்க வேண்டாமா? இராமனோடு வாழ்ந்த குரங்குகளில் ஒன்றை எனக்குத் தெரியும். அதை அழைத்து இந்தப் பாலத்தைப் பரீட்சித்துப் பார்ப்போமா?" என்றான் கண்ணன். அருச்சுனனும் "சரி, உனது விருப்பம்." என்றான். கண்ணனும் அனுமனை மனத்தில் நினைத்தான். அனுமனும் தோன்றினான்.

தன் முன் தோன்றிய அனுமனை பாலத்தின் மேல் நடக்கும்படி கணணன் சொன்னான். அனுமன் கால் வைத்ததுமே பாலம் உடைந்து விழுந்து விட்டது. அனுமன் பலமாகச் சிரித்தான். பின் அருச்சுனனைப் பார்த்து, "அருச்சுனா! நான் அடியெடுத்து

வைக்கும்போதே விழுந்து விட்ட பாலத்தில் வானரசேனை எப்படி பாலத்தில் ஏறிக் கடக்க முடியும்?." என்று கேட்டான்.

அருச்சுனனுக்கு அவமானமாக இருந்தது. "வெறுமே ஒரு குரங்கு என்னைக் கேலி செய்கிறதே!" மைத்துனனின் வேதனை கண்ணனுக்குப் புரிந்தது. கண்ணன் அவனைப் பார்த்து, "அருச்சுனா! இன்னொரு தரம் முயற்சி செய்து பார்." என்றான். அருச்சுனனும் மனதில் கண்ணனைத் தியானித்துக் கொண்டே அடுத்த முறை பாலத்தைக் கட்டினான். அனுமன் அப்பாலத்தில் ஏறினான். ஓடினான். தாம்தீம் என்று குதித்தான். எதுவுமே நடக்கவில்லை.

அனுமன் கண்ணனை வணங்கி விட்டுச் சென்று விட்டான். அருச்சுனனும் மைத்துனனை வணங்கினான். கண்ணன் அருச்சுனனை நோக்கி, "மைத்துனா! முதல்தடவை பாலம் அமைத்தபோது உன்னிடம் வீரன் என்னும் அகங்காரம் இருந்தது. திரும்பவும் பாலம் அமைக்கும்போது உன்னிடம் அது இருக்கவில்லை. அதனால் தான் அனுமன் முன்பு ஏறியபோது அது தகர்ந்து விழுந்து விட்டது. எக்காரியத்தைச் செய்யும்போதும் அகந்தை கொண்டு செய்வதனால் பயனில்லை."



15.3.91 இதழிலிருந்து.....................

## வாக்குத் தவறாத மான்

ஓர் அடர்ந்த காட்டில் ஒரு மான் குடும்பம் வசித்து வந்தது. அப்பாமான், அம்மாமான் பிள்ளைகள் (குட்டிகள்) மூவர் என்று ஐந்து பேர் உள்ள குடும்பம் ஆகும்.

அப்பாமானும், அம்மாமானும், பிள்ளைகளுக்கு உணவு தேடப் போவது வழக்கம். ஒரு நாள் இருவரும் உணவு (இரை) தேடிப் போனார்கள். அவர்கள் ஒரு நாளும். நீண்ட தூரம் போவதில்லை. வேட்டைக் காரர்களின் தொல்லை அதிகமாக இருந்தது. அன்று அவர்கள் நீண்ட தூரம் சென்று விட்டார்கள். அம்மாமான் தன்னை மறந்த நிலையில் தனித்துப் போய்விட்டது. தனித்துவிட்ட தால் அதற்கு எங்கே எப்படிப் போவது என்று புரியவில்லை. அப்பாமான் நீண்ட நேரம் காத்திருந்து விட்டு திரும்பிச் சென்றது. தனித்து நின்ற

அம்மாமானை ஒரு வேடன் கண்டான். மான் இறைச்சியில் உள்ள ருசி அவனுக்கு நன்கு தெரியும். எனவே மானைக் குறி வைத்து அதன் அருகே மெதுவாக வந்தான். "மானே ஓட நினைக்காதே! உன்னை நான் கொல்லப் போகின்றேன்" என்று சொல்லிச் சிரித்தான்.

வேடனைக் கண்டதும் அம்மாமான் நடுங்கத் தொடங்கியது. "வேடரே, என்னை விட்டு விடுங்கள். உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும் என்று சொல்லி அழுதது. அதற்கு வேடன் 'மானே வேட்டைத் தொழிலில் பாவம், புண்ணியம் பார்க்க-முடியாது. நான் பாவம் பார்க்கத் தொடங்கினால் பட்டினி கிடந்து சாகவேண்டியது தான். என்றான். எனக்குப் பாவம் பார்ப்பதால் நீங்கள் பட்டினி கிடந்து இறக்க வேண்டும்' என்றால்? நான் உங்களுக்காக இறக்கத் தயார்! ஆனால்?



நான் வீடு சென்று எனது பிள்ளைகளைப் பார்த்து விட்டு வரவேண்டும் என்று சொல்லியது அதற்கு வேடன் "நீ என்னை ஏமாற்றி விட்டு ஓடவா பார்க்கின்றாய்? உன்னை விடவே மாட்டேன் என்றான். அதற்கு மான் "நான் ஒன்றும் வாக்குத் தவறுவதற்கு மனிதன் அல்ல! என்னை நம்புங்கள் என மன்றாடியது. வேடன் மனம் இரங்கினான். மானிடம் நீ போய் உடனே திரும்பி வந்துவிடவேண்டும் என்று சொல்லி மானை அனுப்பிவிட்டுத் தானும்

இதை சந்தடி இல்லாமல் மெதுவாக
மானைத் தொடர்ந்து சென்றான்.

வீட்டிற்குச் சென்ற அம்மாமான்
நடந்தவற்றை எல்லாம் தனது கணவனிட
மும் குழந்தைகளிடம் சொன்னது.
தன்னை வேடன் பார்த்துக் காத்துக்கொண்
டிருப்பான் எனச் சொல்லிக் கொண்டு
"சரி போகிறேன்" என்றது. அதற்குக்
குழந்தை மான்கள் "அம்மா நீங்கள்
இல்லாமல் எங்களால் வாழ முடியாது
நாங்களும் உங்களுடன் வந்து சாகின்
றோம் எனச் சொல்லி அழுதன.

பற்றை மறைவில் இவற்றைக்
கவனித்துக் கொண்டிருந்த வேடனுக்கு
மானின் நேர்மையும், குட்டிகளின்
பாசமும் மனதை உருக்கியது. நேரே
மான்களிடம் சென்றான் "உங்களது
நேர்மையும், பாசமும் என்னைத் திருத்தி
விட்டது. இனிமேல் நான் வேட்டை ஆடிக்
குடும்பங்களைச் சீர்குலைத்து வாழமாட்
டேன். இதுவரை நாளும் நான் பெருங்

கொடூரமான, இழிவான தொழிலைச் செய்து வந்திருக்கின்றேன் இனிமேல் நான் மனிதனாக உழைத்து வாழப் போகின்றேன் என்று சொல்லி வில்லையும், அம்பையும் வீசி எறிந்துவிட்டு வேகமாக நடந்தான்

செல்வி: பிங்கலை-
— இராஜேஸ்வரன்

* உலோகத்தில் அச்சு எழுத்துகளை வார்த்துப் பயன் படுத்தும் முறையை முதன் முதலாக ஜேர்மனியில் 1438ம் ஆண்டு கூடன் பேர்க் (Gutenberg) என்பவர் கண்டு பிடித்தார் ஆனாலும் 1450ல் தான் அவர் அச்சிட்ட முதல் புத்தகம் வெளிவந்தது

* அரபு நாடுகளில் வெப்பானில் மட்டுமே பாலைவனம் இல்லை.

* கானடா (KANADA) என்பதற்கு ஒன்றும் இல்லை என்று அர்த்தமாம்.

# ஓநாயும் ஆட்டுக்குட்டியும்

ஓநாய் ஒன்று ஆட்டுக்குட்டி ஒன்றைக் கண்டது. அதைப் பிடித்துத் தின்னத் துரத்தியது. ஆட்டுக் குட்டியும் ஓடத் தொடங்கியது. ஓநாயும் துரத்திக் கொண்டு போனது. ஆட்டுக்குட்டி கோவிலுக்குள் புகுந்து அதன் கதவைச் சாத்திக் கொண்டது.

ஓநாய் இதை எதிர்பார்க்கவில்லை. எப்படியும் ஆட்டுக்குட்டியைப் பிடித்துத் தின்ன விரும்பியது. அதனால் அது கோவிலுக்கு வெளியே இருந்தது. நெடுநேரமாகியும் ஆட்டுக்குட்டி வெளியே வர-வில்லை.



ஏ! ஆட்டுக்குட்டியே! இப்படி முட்டாள்த் தனமாகக் கோவிலுக்குள் அடைபட்டு விட்டாயே! உன்னை நினைக்க எனக்குப் பரிதாபமாக இரு-க்கிறது. சிரிப்பாகவும் இருக்கிறது. இன்னும் சிறிது நேரத்தில் கோவில் பூசாரி வந்து உன்னைப் பலி கொடுக்கப் போகின்றான். அதற்கு முன் வெளியே வந்து தப்பி ஓடிப் போய்விடு என்று ஓநாய் சொன்னது.

இதைக் கேட்ட ஆட்டுக்குட்டி ஓநாய் அண்ணாவே உங்கள் புத்திமதிக்கு நன்றிகள். வெளியில் வந்து ஓநாய்க்குப் பலியாவதை விட கடவுளுக்குப் பலியாவது மேலானது! என்று சொன்னது. ஆட்டுக் குட்டி விபரம் தெரிந்த குட்டி என்று தனக்குள் ஓநாய் சொல்லிக் கொண்டு ஏமாற்றத்துடன் திரும்பியது.



☐ இரண்டாம் உலகமகாயுத்தத்தின் போது இங்கிலாந்தின் புகழ்வாய்ந்த கல்வி நிலையங்கள் மீது குண்டு வீச வேண்டாம் என்று கிட்லர் தனது படைகளுக்குக் கட்டளை இட்டிருந்தான்.

19.1.97 இதழிலிருந்து......................

## நிறைகுடம்



அது ஒரு சிறிய கிராமம். அங்கு மிகப் பிரபல்யம் வாய்ந்த பண்டிதர் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்தார். சுற்றி இருந்தவர்கள் ஆடாமல் அசையாமல் இருந்து சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள். பண்டிதர் திறமைசாலி தான். ஆனால் தான் பெரிய படிப்பாளி என்று கர்வம் கொண்டவர். ஒரு கவிதையிலிருந்து சில வரிகளைச் சொல்லி விட்டு, "இந்தக் கவிதையின் கருத்து உங்களுக்குத் தெரியுமா?" என்று கர்வத்துடன் கேட்டார்.

அவ்வூரில் இருந்த சில அறிஞர்கள் விழித்தனர். ஏனெனில் அவர்களுக்கு அதன் உட்பொருள் விளங்கவில்லை. அவர்கள் விழிப்பதைக் கண்டதும் "இங்குள்ள ஒருவருக்கும் இதன் உட்பொருள் விளங்கவில்லையா?" என்று அதே கர்வத்துடன் கேட்டார். சபையில் இருந்த ஒரு தாடிக்காரர் எழுந்து நின்றார். நின்றவர், "நான் சொல்லுகின்றேனே" என்றார்.

*"எளிய உடையில் எளிமையாகத் தோன்றும் இவரா! இதற்கு மறுமொழி சொல்லப் போகின்றார். இவரைப் பார்த்தால் படித்தவரைப் போல தோன்றவில்லையே?" என்ற இறுமாப்பு பண்டிதருக்கு. அவரைக் கேவலமாகப் பார்த்தார். தாடிக்காரர் பண்டிதர் சொன்ன வரிகளுக்கு மிக அழகாகப் பதில் கூறினார். பண்டிதர் திகைத்து விட்டார். இச்சிறிய கிராமத்தில் எளிமைக் கோலத்தில், இவ்வளவு அறிவுடன்.......... பண்டிதர் அமைதியானார்.*

*அவரை நெருங்கி, "நீங்கள் யார்?" என்று பணிவோடு கேட்டார். தாடிக்காரரும் அமைதியாகவே பதில் கூறினார். "நீங்கள் சொல்லிய கவிதையின் சொந்தக்காரன். என் பெயர் இரவீந்திரநாத் தாகூர்". அவர் யாரென்று நினைக்கிறீர்கள்! இந்தியாவின் தேசியகீதத்தை எழுதியவரும், நோபல் பரிசு பெற்ற இலக்கிய மேதையுமான வங்கக்கவிஞர் இரவீந்திரநாத் தாகூரே தான்.*

பிரித்தானியாவில் வெளிவரும் சன் (Sun) பத்திரிகையின் ஒரு நாள் ஆசிரியராக இலங்கையைச் சேர்ந்த கணேஷ் சிற்றம்பலம் (B.SE) என்னும் பதின்மூன்று வயதுச் சிறுவன் இருந்திருக்கின்றான்.

19.7.95 இதழிலிருந்து....................

## சொந்த நாட்டை விட்டு

சொந்த நாட்டை விட்டு வந்து
இந்த நாட்டில் வாழ்கிறோம்
சொந்த நாட்டுச் சிறுவர் படும்
துன்பம் உமக்குத் தெரியுமோ?

தாயுமின்றி தந்தையின்றி
தவிக்கும் பாலர் ஒருபுறம்
கல்வி கற்க வழியுமின்றிக்
கலங்கும் சிறுவர் ஒருபுறம்



உண்ண நல்ல உணவுமின்றி
தொடரும் யுத்தக் கொடுமையாலே
உடுக்க நல்ல உடையுமின்றி
தொடர்ந்து அல்லல் படுகின்றார்

சொந்த நாட்டை விட்டு வந்து
சொகுசாய் நீங்கள் வாழ்கிறீர்
வந்து விட்ட நாட்டில் நீங்கள்
வறுமையின்றி வாழ்கிறீர்

தாயுமுண்டு தந்தையுண்டு
தங்க நல்ல இல்லமுண்டு
படிக்கப் பள்ளிக்கூடமுண்டு
பாட ஆட நண்பருண்டு

உண்ண நல்ல உணவுமுண்டு

உடுக்க நல்ல உடையுமுண்டு
நினைத்ததெல்லாம் கிடைக்கும் நாட்டில்
நிம்மதியாய் வாழ்கிறீர்

செழிப்பு மிக்க நாட்டில் வாழும்
செல்லச் சிறுவர் சிறுமிகாள்
சிறந்த கல்வி தன்னைக் கற்று
செழிப்புடனே வாழுவீர்

அன்புடனே அனைவரையும்
அணைத்து வாழப் பழகுவீர்
பண்புடனே கல்வி கற்று
பாரினிலே வாழுவீர்

அமுதினி-


.7.95 இதழிலிருந்து......................

## கெடுவான் கேடு நினைப்பான்

கந்தசாமி பணக்காரராக இருந்தாலும், தன் தந்தையார் செய்து வந்த கமத்தொழிலையே செய்து வந்தார். அவரிடம் நான்கு மாடுகள் இருந்தன. அவரது தந்தையார் இறந்தபோது அந்த மாடுகளைக் கந்தசாமியிடம் ஒப்படைத்தார். அந்த மாடுகளைப் கந்தசாமி மிக அன்புடன் வளர்த்து வந்தார்.

மாடுகள் வயலில் நன்றாக வேலை செய்தன. அவர் அன்புடன் நடத்தி வந்தபடியால், அவை

விசுவாசமாக அவரிடம் நடந்தன. மாடுகளைக் கவனித்துக் கொள்ள கணபதி என்ற வேலையாள் இருந்தான். மாடுகளுக்குப் புல் அறுப்பது, குடிப்பதற்கு நீர் வார்ப்பது போன்ற வேலைகளை அவன் செய்வான். வாடிக்கையாக ஒரு கடையில் தவிடு வாங்கி வருவதும் அவன் வேலை.



அதற்கான பணத்தை முன்பணமாகவே கணபதியிடம் கொடுத்து விடுவார் கந்தசாமி. தொடக்க காலத்தில் கணபதியும் மாடுகளை நன்றாகக் கவனித்து வந்தான். நாட்கள் செல்லச் செல்ல கணபதியின் கவனிப்புக் குறைந்தது. தவிடுக்குரிய பணத்தைத் திருட்டுத் தனமாகச்

சேமிக்கத் தொடங்கினான். மாடுகளைக் கவனிப்பதைக் கூடக் குறைத்துக் கொண்டான்.

மாடுகள் உணவு போதாமல் கஷ்டப்பட்டன. கொழுத்துக் கம்பீரமாக இருந்த மாடுகள் நாளடைவில் மெலியத் தொடங்கின. வயலில் வேலை செய்ய முடியாமல் களைத்தன. மாடுகளுக்கு ஏதாவது வருத்தம் வந்து விட்டதோ என்று யோசித்த கந்தசாமி மாடுகளை மிருக வைத்தியர் ஒருவரிடம் காண்பித்தார். மிருக வைத்தியர் மாடுகள் போசாக்குக் குறைந்து விட்டதால் மெலிந்திருக்கின்றன. நோய் ஒன்றுமில்லை என்று கூறினார்

கந்தசாமி தவிடு வாங்கும் கடைக்குச் சென்று விசாரித்தார். அங்கு கணபதி சில காலமாகத் தவிடு வாங்கவில்லை என்று அறிந்தார். கணபதியைக் கூப்பிட்டு விசாரித்தார். கணபதி எதுவுமே கூறாமல் மௌனம் சாதித்தான். அன்றிலிருந்து அவனை வேலையிலிருந்து நீக்கி விட்டார். கணபதி தான் பிழை விட்டதை உணராமல், கந்தசாமியிடம் கோபம் கொண்டான். கந்தசாமி வீட்டில் இல்லாத நேரத்தில் மாட்டுத் தொழுவத்திற்குச் சென்று மாடுகளைத் துன்புறுத்தினான்.

வலி தாங்க முடியாத மாடுகள் கால்களால் அடித்தன. கொம்புகளால் தாக்கின. அவன் ஐயோ அம்மா என்று கத்தினான். கத்திய சத்தம் கேட்டு வந்த அயலில் உள்ளவர்கள் அவனை வைத்தியசாலையில் சேர்த்தனர். விஷயம் அறிந்த கந்தசாமி வைத்தியசாலைக்குச் சென்று அவனைப் பார்த்தார். கணபதி கந்தசாமியிடம் மன்னிப்புக் கேட்டான்.

கந்தசாமி அவனைப் பார்த்து "கெடுவான் கேடு நினைப்பான்" என்ற பழமொழி உனக்கு எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பார்த்தாயா? பேசும் சக்தியற்ற மிருகங்களை வதைத்தாய். அவைகளுக்கிருக்கும் அன்பையும் விசுவாசத்தையும் அறியவில்லை. வைத்தியசாலையில் இருந்து வீட்டுக்கு வந்ததும் திரும்பவும் வேலையில் சேர்ந்து கொள் என்றார்.

கணபதியும் வருத்தம் மாறியதும் திரும்பவும் வேலையில் சேர்ந்து கொண்டான். மாடுகளை நன்றாகக் கவனித்து வந்தான். அன்புடன் நடந்தான். மாடுகளும் அவனிடம் விசுவாசமாக நடந்து கொண்டன.

16.12.90 இதழிலிருந்து......................

## உங்களுக்குத் தெரியுமா?

நோபல் பரிசின் இன்றைய மதிப்பு 2லட்சம் அமெரிக்க டாலர்கள்.

ஆசியாவில் நான்கு நாடுகளில்தான் பூமிக்கடியில் ஓடும் ரயில்கள் (U BAHN) உண்டு. அவற்றில் இந்தியாவில் உள்ள கல்கத்தாவும் ஒன்று.

தன் காலால் மனிதனை உதைத்தே கொல்லக் கூடிய பலம் வாய்ந்த பறவை தீப்பறவையாகும்.

பார்லிமண்ட ஆட்சி முறை தோன்றியது இங்கிலாந்து நாட்டில்தான். இதற்கு 1265ல் ஆரம்பகர்த்தாவாக விளங்கியவர் சைமன் டீ மாண்ட்ஃபோர்ட் என்பவரே.

நினைவுத் தபால் தலைகளை முதலில் வெளியிட்ட நாடு அமெரிக்காதான். 1893 ஜனவரி மாதம் 2ந்திகதி கொலம்பியக் கண்காட்சியை ஒட்டி வெளியிட்டது.

நீலத் திமிங்கிலம் ஆறு மாத காலம் உண்ணாமல் இருக்கும் சக்தி வாய்ந்தது.

நாய்களுக்கு பாதங்களில்தான் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன.

யுகோஸ்லாவியாவில் அல்பேனியப் பெற்றோருக்குப் பிறந்த அன்னை தெரேசா 18 வயதில் ஆசிரியராகப் பணியாற்ற 1928ல் இந்தியா வந்தார். 1948ல் இந்தியக் குடியுரிமை பெற்றார்.

இந்தியாவில் உள்ள ஜம்மு காஷ்மீர் என்ற இடம் 14ஆயிரம் அடி உயரத்தில் உள்ளது. இந்த ஊரில் உள்ள தபால் நிலையம்தான் உலகிலேயே மிகவும் உயரமான இடத்தில் அமைந்துள்ளதாகும்.

16.12.90 இதழிலிருந்து.........................



## கேவலம்

காட்டில் இருந்த மிருகங்கள் சிலவற்றிற்கு காட்டு வாழ்க்கை வெறுத்தது. தாங்களும் நாட்டுக்குச் சென்று நகரத்தில் வாழவேண்டும் என விரும்பின. நாட்டுக்குச் சென்று வாழ விரும்பிய மிருகங்களில் கரடியும் ஆடும் ஒருநாள் சந்தித்தன. மனிதர்களின் உடுப்புக்களை எப்படிப் பெறுவது என்று யோசித்தன. வழியில் வந்த காகம் இவர்கள் கதைப்பதைக் கேட்டது. தான் அவற்றை எடுத்துத் தருவதாகக் கூறியது. கரடியும் ஆடும் சந்தோஷப்பட்டன.

காகம் சொன்னபடியே ஒரு வீட்டில் வெளியே காய விட்டிருந்த உடுப்புக்களை எடுத்துக் கொண்டு வந்தது. தானும் ஒரு சிறுமியின் சட்டையைப் போட்டுக் கொண்டது. மூவரும் நாட்டுப் புறம் வந்து நகரத்திற்கு வந்தார்கள். ஒரே இரைச்சலாக இருந்தது. மனிதர்கள் மனிதர்களைக் கொன்று குவித்துக் கொண்டுருந் தார்கள். மனிதனுக்கு மனிதன் பயந்து ஓடி ஒளித்துக் கொண்டிருந்தார்கள். இவர்கள் மூவரும் வேறிடம் சென்றார்கள். அங்கும் மனிதர்களுக்குள் போட்டி பொறாமை, கொலைகள் எல்லாம் நடந்து கொண்டிருந் தன.

கரடிக்கு இவற்றைப் பார்க்கக் கவலையாக இருந்தது. அது ஆட்டைப் பார்த்து "இந்த மனிதர்கள் எம்மைவிடக் கேவலமாக இருக்கிறார்கள். நாங்கள் போயும் போயும் இந்த மனிதர்கள் போல ஆக வேண்டும் என நினைத்தது எவ்வளவு கேவலத்திலும் கேவலம். சீ....சீ...வா வா நாங்கள் காட்டிற்கே போய்விடுவோம். மனிதன் வேண்டும் என்றால் காட்டிற்கே வந்து எப்படி வாழ வேண்டும்? என எங்களிடம் கற்றுக் கொள்ளட்டும்" என்று கூறியது. ஆடு தான் மனிதர்களைப் பற்றி உயர்வாகக் கருதிக் கொண்டது தவறு எனக் கூறியபடி உடுப்புக்களைக் கழட்டி எறிந்தது. பின் கரடியுடன் சேர்ந்து காட்டிற்கு திரும்பிப் போனது. அங்கு ஏனைய மிருகங்கள் "மனிதனைப் பற்றி நாங்கள் சொன்னதை நம்பாமல் போனீர்கள். இப்ப நேரில் கண்டீர்கள் சரிதானா?" என்று கேலி பேசின.

1991 தைப்பொங்கல் தினம் தனது இரண்டாவது வயதைத் தொடங்கும் அமுதம் முழுக்க முழுக்கச் சிறுவர்களின் ஆக்கங்களுடனே வெளிவர இருக்கின்றது. உங்ககளிடமிருந்து பலவிதமான ஆக்கங்கள் எதிர்ப்பார்க்கப்படுகின்றது. உடனே அனுப்பிவையுங்கள் படம் கீறக்கூடியவர்கள் கதைகளுக்கு ஏற்ற படங்களை ( கறுப்பு மையினால்) வரைந்து அனுப்பவும். உங்கள் ஆக்கங்களுடன் உங்கள் புகைப்படம் பிரசுரமாக வேண்டு என்றால் புகைப்படமும் அனுப்பிவையுங்கள்


அமுதம் தை 91 இதழுக்கு ஆக்கங்கள் அனுப்புகின்ற எல்லா சிறுவர்களுக்கும் பரிசு கா த்திருக்கின்றது. உடனே அனுப்பிவையுங்கள்

ஆசிரியர்

19.1.98 இதழிலிருந்து......................

# சொத்து
(கதைப்பாடல்)





பாடசாலை விட்டுக் கண்ணன்
 வீடு வந்தனன்-வீட்டுள்
பலத்த சத்தம் கேட்டுக் கண்ணன்
 பதுங்கிக் கொண்டனன்

வீட்டுள் எட்டிப் பார்த்த கண்ணன்
விலகி நின்றனன்
விலகியவன் மீண்டும் மெல்ல எட்டி
விழித்துப் பார்த்தனன்

அப்பா கையில் கத்தியுடன்
கத்திப் பேசுறார்-அவர்
எதிரில் நின்று சித்தப்பாவும்
எகிறிப் பாய்கிறார்

அழுது கொண்டு சித்தி அவர்
அருகில் நிற்கிறார்-அம்மா
அப்பாவோடு சேர்ந்து நின்று
அதட்டிப் பேசுறார்

காதைத் தீட்டிக் கண்ணன் கதையைக்
கேட்கலாயினன்- "தந்தை
தந்த சொத்தில் உரிமையில்லை"
தந்தை உரைக்கிறார்.

"போடா, வெளியே" என்று அப்பா
கத்திச் சொல்கிறார்- சித்தி
கையைப் பற்றிச் சித்தப்பாவும்
தெருவில் இறங்கிறார்..

திகைத்து நின்ற கண்ணன்- சித்தி
கையைப் பற்றினான்-"சித்தி

போக வேண்டாம்" என்று சொல்லிப்
பொருமி அழுதனன்.

சித்தி அவனைக் கட்டிக் கொண்டு
தேம்பி அழுதனள்-பின்
"சின்னாளாய் இருந்திடு நீ
என்று கூறினள்

"பெரிசானால் இப்படித்தான்"
என்றும் கூறினாள்-சண்டை
சொத்துக் கேட்டு விட்டதனால்,
என்றும் கூறினாள்.

பங்கு சொத்தில் கேட்டதாலே
சண்டை வந்ததோ!
பங்கு கேட்காமலே விட்டிருந்தால்
பாசம் வளருமோ!

தம்பியோடு சண்டை போட
வேண்டாம் என்கிறார்-அப்பா
தான் மட்டும் தம்பியோடு
சண்டை போடுறார்!

என்று எண்ணிக் கண்ணனுமே
ஏக்கம் கொண்டனன்- பின்
என்ன செய்வது? என்றெண்ணித்
திகைத்து நின்றனன்!

-புலவர் பூங்கோதை-

15.1.92 இதழிலிருந்து......................


# தோமஸ் ஆல்வா எடிசன்



ஒரு சிறுவன் பாடசாலையில் அடிக்கடி கேள்விகள் கேட்டான். ஆசிரியருக்குக் கோபம் வந்தது. கேள்விகள் கேட்டுத் தொல்லைப் படுத்திய சிறுவனைப் பாடசாலையை விட்டு வெளியேற்றினார். அந்தச் சிறுவன் பிற்காலத்தில் மனித குலத்திற்குத் தேவையான பல விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களைக் கண்டுபிடித்து உதவினார் அந்தச் சிறுவன் வேறு யாருமல்ல! தோமஸ் ஆல்வா எடிசன் என்னும் விஞ்ஞானிதான்.

இந்த விஞ்ஞானி சிறுவனாக இருந்த போது, கோழி; முட்டை மீதிருந்து அடைகாக்கலாம் என்றால், தான் ஏன் கோழி முட்டை மீது அமர்ந்திருந்து அடைகாக்க முடியாது? என்று கேட்டுக் கோழி முட்டை மீது அமர்ந்திருந்து கோழி முட்டையை உடைத்திருக்கின்றான்.

பாடசாலையிலிருந்து வெளியேற்றப் பட்ட எடிசனுக்குத் தாயாரே கல்வி கற்றுக் கொடுத்தார். எடிசன் தனது பத்தாவது வயதிலே வீட்டில் ஓர் ஆராய்ச்சிக் கூடத்தை நிறுவிக் கொண்டான். ஆராய்ச்சிக்குத் தேவையான பொருட்களை வாங்கப் பணம் தேவைப்பட்டது. அதற்காகப் பத்திரிகைகளையும் இனிப்புப் பொருட்களையும் விற்றுப் பணத்தைத் தேடினார். 1861-ஆம் ஆண்டு அமெரிக்காவில் உள்நாட்டுக் கலவரம் தொடங்கியது. இந்த நேரத்தில், செய்திகளை உடனுக்குடன் அறிய மக்கள் விரும்பினார்கள். செய்திகளை உடனுக்குடன் கொடுக்கத் தூர இடங்களிலிருந்து வரும் பத்திரிகைகளால் முடியவில்லை. தானே ஓர் அச்சுக் கூடத்தை (அச்சகம்) நிறுவ விரும்பினார். தான் பத்திரிகை விற்கும் புகைவண்டியிலே அச்சுக் கூடத்தை அமைத்தார்.



ஒருநாள் புகைவண்டியை விட்டுக் கீழே இறங்கி நின்றார். புகைவண்டி புறப்பட்டபோது, ஓடிப்போய் ஏற முயற்சித்தார். "ஓடும் புகைவண்டியில் ஏறி விழுந்து விடாதே!" என்று ஒருவர் இவரின் காதைப் பிடித்து இழுத்தார். இதனால் சிலகாலம் காது கேளாமல் செவிடாகவே இருந்தார்.

எடிசன் தனது ஆராய்ச்சிக் கூடத்தையும் புகை வண்டியிலே அமைத்துக் கொண்டார். ஒரு நாள் ஆராய்ச்சிக் கூடத்தில் திடீரென நெருப்புப் பிடித்துப் பற்றி எரியத் தொடங்கி விட்டது. இதைக் கண்ட அதிகாரிகள் எடிசனுடைய பொருட்கள் எல்லாவற்றையும் தூக்கி எறிந்து வெளியே வீசினார்கள். எடிசனை அதன் பின்னர் புகை வண்டியில் ஏற விடவில்லை.

சிலநாட்களின் பின்னர் புகையிரத நிலைய அதிகாரி ஒருவரின் மகனை விபத்திலிருந்து காப்பாற்றினார். மகிழ்ச்சி அடைந்த அதிகாரியிடம் எடிசனுக்குக் கொடுக்க எதுவும் இருக்கவில்லை. ஆனால் தந்தி அடிப்பது எப்படி என்று காட்டிக் கொடுத்தார். இதைக் கற்றதனால், இதிலிருந்து தந்தியடிக்கும் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார். இதன் பின்னர் தந்திச் செய்திகளைப் பதிவு செய்யும் இயந்திரத்தையும் கண்டு பிடித்தார்.

நியூஜேர்சி என்னும் நகரில் ஓர் ஆராய்ச்சிக் கூடத்தை அமைத்து 1878-ஆம் ஆண்டு மின்சார பல்பைக் கண்டு பிடித்தார். புத்தாண்டு நாளில் நியூஜேர்சி நகரை மின்சார விளக்கினால் அலங்கரித்துக் காட்டினார்.

1912-ஆம் ஆண்டு எடிசனுக்கும் அவருடன் சேர்ந்து பணியாற்றிய டெஸ்லாவிற்கும் நோபல் பரிசு கிடைத்திருக்க வேண்டும். ஆனால் எடிசனுடன் இணைந்து பரிசுத் தொகையைப் பெற டெஸ்லா விரும்ப வில்லை. இதனால் இருவருக்கும் நோபல் பரிசு கிடைக்கவில்லை. 1931-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ந் திகதி இறக்கும் வரையும் எடிசன் ஆராய்ச்சிகள் செய்து கொண்டே இருந்தார்.

14.1.91 இதழிலிருந்து......................

# ஒலிம்பிக் விளையாட்டுக்கள்

உலக மக்கள் அனைவருடைய கவனத்தையும் பெறுகின்ற ஒரு மாபெரும் நிகழ்ச்சியாக ஒலிம்பிக் விளையாட்டுகள் உள்ளன. நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை இந்த ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த விளையாட்டை கிரேக்க நாட்டவர்கள் (Griechenland) முதன் முதலில் 2765 வருடங்களுக்கு முன்னர் தொடக்கி வைத்தார்கள். நீண்ட காலமாக (ஆயிரம் வருடங்களுக்கு மேல்) ஒலிம்பியா என்னும் நகரத்தில் இந்த விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்று வந்ததால் ஒலிம்பிக்ஸ் என்னும் பெயரும் வந்தது.

ஆரம்ப காலங்களில் ஓட்டம், மற்போர்(மல்யுத்தம் Wresling) குத்துச் சண்டை (Boxing) நீளம் தாண்டுதல் தட்டு எறிதல், ஈட்டி எறிதல், குதிரை ஓட்டம் போன்ற சில விளையாட்டுக்களே இடம் பெற்றன. இப்போட்டி களில் வெற்றி பெற்றவர்கள் பெரிதும் மதிக்கப்பட்டார் கள். வீரர்களுக்கு சிலைகள் வைத்து புகழப்பட்டார்கள். புகழ்ந்து பாடல்கள் பாடப்பட்டன.

ஆரம்பகாலங்களில் போட்டிகளில் கலந்து கொண்ட வர்கள் எந்தவிதமான உடுப்புகளும் அணியவில்லை எனத் தெரிகின்றது. மணமான பெண்கள் கலந்து கொள்ளவோ, பார்க்கவோ அனுமதிக்கப் படவில்லை. அங்குள்ள மிகப் பழமையான ஜயஸ் தேவதையின் தாய் ரியாவின் ஆலயம் மாசு (குற்றம்) பட்டு விடும் எனக் கிரேக்கர்கள் நம்பியதே காரணம். சிறுமிகள் அனுமதிக்கப்பட்டனர். எந்தப் பெண்ணாவது தடையை மீறி விளையாட்டுப் போட்டியைக் காணவந்தால்? அவளை மலைக்குக் கொண்டுபோய்த் தள்ளி விழுத்திக் கொன்று விடுவார்கள்.

பழைய ஒலிம்பிக் போட்டிகளைத் தடை மீறி வந்து கண்டு களித்து (மகிழ்ந்து) உயிர் தப்பிய ஒரு வீரப் பெண்மணி பற்றிய செய்தியும் உண்டு.

காலிப்டீரா என்னும் விதவை (கணவனை இழந்தவள்) ஒருத்தி தனது மகன் பங்கு பற்றும் போட்டி களைப் பார்க்க விரும்பினாள். பந்தய (போட்டி) முடிவு சொல்லும் நீதிபதிகளில் ஒருவரைப் போல ஆண் உடை அணிந்து வந்திருந்தாள்.

போட்டிகளில் தனது மகன் வெற்றி பெற்றதைக் கண்டும் மகிழ்ச்சியை அடக்கி வைத்துக் கொள்ள முடியவில்லை. ஆண் உடைகளை கழட்டி எறிந்து விட்டு தனது மகிழ்ச்சியை ஆட்டம் ஆடிக் காட்டினாள். அவள் பிடிபட்டாள். அவளது தந்தை, சகோதரர்கள், பிள்ளைகள் எல்லோரும் ஒலிம்பிக் வீரர்களாக இருந் தனர். அதனால் அவளைக் கொலை செய்ய முடியவில்லை. ஆனால் இனியும் இப்படியான சம்பவம் நிகழாமல் இருக்க சட்டங்கள் திருத்தப்பட்டன. இனிமேல் நீதிபதிகள் எந்த உடையும் அணியக்கூடாது என்பதுதான் அத்திருத்தமாகும்

பழைய (புராதன) ஒலிம்பிக்ஸ் நான்கு ஆண்டு களுக்கு ஒரு முறை கோயில் திருவிழா போல் கொண்டாடப்பட்டு வந்தது.

கிறிஸ்தவ மதத்தை தழுவிய ரோமர் சக்கரவர்த்தி தியோயோசியஸ் ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக்கள் சமயத்திற்கு எதிரானவை என்று தடைவிதித்தான். 1500 ஆண்டுகள் ஒலிம்பிக்ஸ் போட்டிகள் நடைபெறவில்லை.

பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த பியர் கூபெர்ட் என்கிற பிரபு ஒருவரின் முயற்சியால் 1896ம் ஆண்டு கிரேக்க நாட்டின் தலைநகரானஏதென்ஸில் மீண்டும் நடைபெற்றது. 1908ம் அண்டிலே அது ஓர் அமைப்பு உருவம் பெறத் தொடங்கியது. நவீன ஒலிம்பிக்ஸ் என் கிற பெயரையும் பெற்றது.

# மகிழாபுரி

14.1.90 இதழிலிருந்து...............

மகிழாபுரி எனும் நாட்டைத் தருமராஜன் எனும், பெயருடைய மன்னன் ஒருவன் ஆண்டு வந்தான். தருமராஜன் பெயருக்கே பொருத்தம் இல்லாத கொடுமையான அரசனாக இருந்தான். மகிழாபுரி நாடும் மகிழ்ச்சி இல்லாமல், மக்கள் வறுமையில் வாடினார்கள். அந்நாடு மகிழாத புரியாகவே இருந்து வந்தது.

நாட்டு மக்கள் அரசனுக்கு வரியாக நெல்லைக் கொடுக்க வேண்டும். அரசன், அடிமைகள் மூலம், நெல்லிலிருந்து அரிசி, தவிடு, உமி, என்பனவற்றை வேறாக்கி அரிசியை அரசன் எடுத்துக்-கொண்டு தவிட்டையும், உமியையும் மக்களிடம் கொடுத்து விடுவான். மக்கள் தவிட்டைத் தான் சாப்பிட்டு, வயிற்றை நிரப்பிக் கொண்டார்கள். மக்கள்

நாள் தோறும் தருமராஜனைத் திட்டிக்-
கொண்டேயிருந்தார்கள்.

அரசனுக்கு முதுமைப் பருவம் வந்துவிட்டது. நாட்டின் ஆட்சிப் பொறுப்பை, தன் மகன் மகாதருமராஜனிடம் கொடுக்க முன் வந்தான். தனது மகனை அழைத்து, "மகனே இந்த நாட்டு மக்கள் என்னை வாழ்த்திப் போற்றக் கூடியதாக என்னால் ஆட்சி செய்ய முடியாமற் போய் விட்டது நீயாவது என்னை வாழ்த்திப் போற்றக் கூடிய-தாக ஆட்சி செய்வாய் என நம்புகிறேன்" எனச் சொல்லி இறந்து போனான்.

மகன் ஆட்சிக்கு வந்ததும், மக்களிடமிருந்து நெல்லைப் பெற்றுக்கொண்டு அரிசியையும், தவிட்டையும், தான் எடுத்துக்-கொண்டு, உமியை மட்டுமே மக்களுக்குக் கொடுத்து வரத் தொடங்கினான். தகப்பனின் ஆட்சிக் காலத்தின் போது அவனைத் திட்டிய மக்களுக்கு, மகனின் ஆட்சியின் காரணமாக தருமராஜனின் ஆட்சிக் காலத்தையும் அவனையும் போற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று*

14.1.94 இதழிலிருந்து.....................

இசைத் துறையில் சாதனை புரிந்த மேதைகளில் பீத்ஓவன் என்பவர் மிக முக்கியமானவர். இவர் ஜேர்மனியில் பொன் நகரில் பிறந்தவர். தனது வாழ் நாளில் கடைசிப் பத்து ஆண்டு காலம் செவிடாக இருந்தார். இந்தக் காலத்திலே இசையில் பல வடிவங்களைச் செய்தார். இவரது காலம் 1770 −1827



BEETHOVEN



TCHAIKOVSKY

தனது சொந்த வாழ்க்கையில் மகிழ்ச்சியில்லாத பலர், மற்றவர்களை மகிழ வைத்துள்ளனர். அந்த வரிசையில் ரஷ்ஷிய இசை மேதை சைகோவ்ஸ்கியும் அடங்குவார். தனது கவலைகளை மறக்க இசைத் துறையில் நுழைந்தார். பாலே நடனத்தில் இவர் இயற்றிய இசை வடிவங்கள் ஆழ்ந்த உணர்ச்சி கொண்டவை. பாலே, சிம்பொனி என்று புகழ் பெற்ற இவர் 1840−1893 காலத்தில் வாழ்ந்தவர்.

AMERIGO VESPUCCI (1451-1512)



அமெரிக்க வெஸ்புசி என்ற இத்தாலியரே முதன் முதலில் பிரேசிலின் கரையை அடைந்த ஐரோப்பியர் ஆவார். தனது பெயரையே அந்தக் கண்டத்திற் குச் சூட்டினார். இவர் பிறப்பால் இத்தாலியராக இருந்தும் ஸ்பெ யின் நாட்டின் உதவியுடனே

கடற் பயணம் செய்தார். தென் அமெரிக்காவின் தென் மேற்குத் திசையாகப் பயணம் செய்தால் இந்தியாவை அடையலாம் என நம்பினார்.

FERDINAND MAGELLAN (1480-1521)



முதன் முதலின் உலகைச் சுற்றிய ஐரோப்பியர் என்ற பெருமை மகெலன் என்ற போர் த்துக்கல் நாட்டவருக்கே உரியது தென் மேற்காகப் பயணம் செய்து இந்தியாவை அடைய லாம் என்பதைத் தனது நெடும் பயணத்தின் மூலம் நிரூபித்துக் காட்டினார்.

19.1.96 இதழிலிருந்து........................

# அழகு

அன்று சனிக்கிழமை. சனிபகவானின் வாகனமாகிய காகத்திற்குக் கொண்டாட்டம். வயிறு நிறைந்த உணவு உண்டாயிற்று. களைப்பாக இருந்தது. பறந்து வந்து வயற்காட்டில் உள்ள மரக்கிளையில் உட்கார்ந்து கொண்டது. "ஜிவ்" வென்ற சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தது. பக்கத்தில் தன் தோகையைச் சுருக்கிக் கொண்டே மயில் வந்து உட்கார்ந்தது.

தன் அழகையும் காகத்தையும் நினைத்துப் பார்த்த மயிலுக்குப் பெருமை பிடிபடவில்லை. காகத்தைப் பார்த்து "காக்கையாரே, என் அழகைப் பார்த்தீரா? எத்தனை வர்ணங்கள் என் உடம்பை அலங்கரிக்கின்றன.என் தலையால உள்ள கொண்டை எவ்வளவு அழகாக இரக்கின்றது. என் தோகையின் நீளத்தையும், அதில் காணும் வர்ணங்களையும் கவனித்தீரா? என் நீளமான கழுத்தின் கவர்ச்சியையும் அந்த நீல நிறத்தையும் பார்த்தீரா? நான் எவ்வளவு அழகாய் இருக்கிறேன்" என்று தன்னைப் பற்றிப் புகழ்ந்து கொண்டது.



காகம்
ஒன்றும் பேசாமல்
கேட்டுக்
கொண்டிருந்தது.
தன்னையும்
காகத்தையும்
நினைத்துச்
சிரித்துக்
கொண்டது மயில்.
பின்பும் சும்மா இருக்கவில்லை. அழகான நான் உனக்குப் பக்கத்தில் இருக்கிறேன். என்னோடு இருக்கும் வேளையில் உன் அழகு, அதாவது உன் கறுப்பு நிறம் நன்றாக இருக்கிறது. ஒற்றை விழியும், அடங்காத முரட்டுச் சிறகும்....... என்று கூறிச் சிரித்தது மயில்.

"ஆண்டவன் படைப்பில் எத்தனை விதம். உன்னைப் படைத்த ஆண்டவன் தான் என்னையும் படைத்திருக்கிறான். இன்னும் பூமியில் எத்தனை விசித்திரங்களைப் படைத்திருக்கிறான். எல்லாம் அவன் செயல்" என்று வேதாந்தமாகப் பேசியது காகம். மயில் காகத்தைப் பார்த்துச் "சமாளிக்கிறாய். உன்னோடு சரிசமமாக இருக்க எனக்கு வெட்கமாக இருக்கிறது. அடுத்த மரத்தில்

போய் இரு" என்றது. மறுப்புக் கூறாமல் காகமும் அடுத்த மரத்தில் போய் இருந்தது.

சிறிது நேரத்தின் அங்கு அமைதி நிலவியது. இறுமாப்புடன் கண்களை மூடிக் கொண்டு தன்னைப் பற்றிப் பெருமையோடு நினைத்துக் கொண்டிருந்தது மயில். அருகில் சத்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தது காகம். வேட்டையாட வந்த காட்டுவாசிகள் விரித்த வலையில் மயில் அகப்பட்டிருந்தது. காட்டுவாசிகளில் ஒருவன் மற்றவனைப் பார்த்து "அண்ணே! இந்த மயிலை மிருகக் காட்சிச்சாலைக்குக் கொடுத்து விடுவோம். எங்களுக்கு நிறையப் பணம் தருவார்கள். எங்கள் சகோதரிக்குக் கல்யாணம் செய்து கொடுத்து விடலாம்" என்று சொன்னான்.

இப்போது காகம் மயிலைப் பார்த்துச் சிரித்தது. மயிலைப் பார்த்து "மயிலாரே!, வாழ்வில் யாருமே கர்வம் கொள்ளக் கூடாது. உம்முடைய அழகைப் பற்றி எப்படி எல்லாம் பெருமை பேசினீர்!. அழகால் வந்த ஆபத்தைப் பார்த்தீரா!. இனி என்ன. உம்மைக் கொன்றிருந்தால் கூடப் பரவாயில்லை. கூட்டில் அடைத்து வேடிக்கை காட்டப் போகிறார்கள். எந்த வித சுதந்திரமும் இல்லாமல் வாழும் வரை

கூட்டிலேயே இருக்கப் போகிறீர். அழகு என்பது இரசிப்பதற்கு மட்டும்தான் என்பதை உணர்ந்து கொள்ளும்." என்றது.

19.1.96 இதழிலிருந்து........................

**<u>இதோ நொடிகள்</u>**

1. கொத்துக் கொத்தாய் ஈச்சங்காய், கோடரி ஈச்சங்காய் மதுரைக்குப் போனாலும் வாடாத ஈச்சங்காய்

2. தண்ணீர் பட்டால் செத்துப் போகும்

3. நீதி தீர்ப்பதில் நிகரில்லாதவன்

4. சேர்ந்திருந்தால் கால் வீடு பிரிந்து விட்டால் குப்பை மேடு

5. தாடிக்காரன் முறைத்துப் பார்க்கிறான்.

விடைகள்:
1. பற்கள் 2. நெருப்பு 3. தராசு 4. செருப்பு
5. ஆட்டுக்கடா

அனுப்பியவர்:ஜெயசாந் மனோரஞ்சிதராஜா
**MÜNSTER**

19.6.96 இதழிலிருந்து.......................

# ஜீவ காருண்யம்

உலகத்திலுள்ள எல்லாச் சமயங்களும் அன்பையே போதிக்கின்றன. எல்லா உயிர்களிடத்தும் அன்பு செலுத்த வேண்டும் என்று அனைத்து வேதங்களும் கூறுகின்றன. ஒருவர் கஷ்டப்படும் பொழுது அல்லது வியாதியால் துன்புறும் போது அவர்களுக்காக இரக்கப்பட்டு உதவி செய்வது ஜீவகாருண்யம். கால்ஒடிந்த ஆட்டுக்குட்டிக்காக கண்ணீர் விட்ட புத்தர் பெருமானின் போதனைகளை ஏற்றுக் கொண்ட நமது நாட்டில் கூட, உள் நாட்டுச் சண்டையால் அவதியுறும் எம் மக்களுக்கு பல வெளிநாட்டு பொது உதவி நிறுவனங்கள் அளப்பரிய தொண்டுகள் செய்து இருக்கின்றன.

ஒரு உயிரின் மேல் இரக்கப்படும் பொழுது சாதி, மதம், மொழி, இனம், நிறம், போன்ற பாகுபாடுகள் தெரிவதில்லை. இதற்கு உதாரணமாக சமீபத்தில் நான் கண்ட ஒரு காட்சியை உங்களுக்கு அறியத் தருகிறேன். அன்று வழக்கம் போல பாடசாலை முடிந்து வீடு நோக்கி நடந்து கொண்டிருந்தேன். வழியில் அம்புலன்ஸ் வாகனம், தீ அணைக்கும் படை வாகனங்கள் அபாய ஒலியுடன் மிகவும் வேகமாக ரீரீ ரீ என்று அலறிக் கொண்டு வந்து கொண்டிருந்தன.

வீதிகளில் சென்று கொண்டிருந்த வாகனங்கள் எல்லாம், அபாய ஒலியுடன் வருகின்ற வாகனங்களுக்கு வழி விட்டு ஒதுங்கிக் கொண்டன. எங்கேயோ

தீப்பிடித்து விட்டது அதனால் தான் தீ அணைக்கும் வாகனங்களும் நீண்ட ஏணிகளுடன் செல்லுகின்றன என்று எண்ணிக் கொண்டேன். வாகனங்கள் சென்று மறைந்து விட்டன. வழியில் தான் ஏதாவது நடந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், அதைக் கண்டு விட ஆவல் கொண்டு மிகவும் வேகமாக நடந்தேன்.

நான் நினைத்தது போலவே, கண்ணுக்கெட்டிய தூரத்தில் சிவப்பு வாகனங்கள் நிற்பது தெரிந்தது. பலர் அந்த வாகனங்களின் அருகில் நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றார்கள். நானும் தோளில் சுமந்த புத்தகப்பையுடன் சென்று பார்த்தேன். அங்கே வயதான ஒரு ஜேர்மன் அம்மையார் தாரைதாரையாக கண்ணீர் சிந்திக் கொண்டிருந்தார். மயக்கம் அடைபவரைப் போல காணப்பட்டார். அவர் அருகே அவர் கணவர் அவருக்கு ஆறுதல் வார்த்தைகள் சொன்னபடி



அணைத்துக் கொண்டு நின்றிருந்தார்.

ஆனாலும் அவருடைய கண்களில் இருந்தும் கண்ணீர் பெருகிக் கொண்டிருந்தது. அவர்களுடைய இரண்டு பிள்ளைகளும் அப்பொழுது தான் காரில் வந்து இறங்கினார்கள். அவர்களும் அருகே வந்து ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆண்டவன் கைவிட மாட்டார்! எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

குடும்பத்திலுள்ள யாருக்கேனும் கடுமையான சுகவீனமோ! எப்படியென்றால் எதற்குத் தீயணைக் தம் வாகனம்? வீடு தீப்பிடித்ததாகவும் தெரியவில்லை என்று வீட்டை அண்ணாந்து பார்த்த பொழுது, வீட்டின் பின் புறத்திலுள்ள ஒரு பெரிய மரத்திலே தீயணைக்கும் படையினர் தங்கள் நீண்ட ஏணியைச் செலுத்தி அதில் ஏறிக் கொண்டிருந்தார்கள். அருகே சென்று பார்த்த பொழுது ஒரு பூனைக்குட்டி மரத்தின் மேலிருந்து கீழே இறங்கத் தெரியாமல் "மியாவ், மியாவ்" என்று பயந்து கத்திக் கொண்டிருந்தது. அதன் உயிரைக் காப்பாற்ற தீயணைக்கும் படையினர் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாது அதை மீட்க முயன்று கொண்டிருந்தார்கள்.

–முகுந்தன் மகேந்திரன்–



மாமரத்துக் கிளையினில்
மறைந்திருந்த இலைகளில்
இணைந்த இரண்டு காகங்கள்
இன்பமாக வாழ்ந்தன

இலை சருகு குச்சியால்
இணைத்துக் கூடு கட்டின
கூடிக் குலவித் திரிந்தன
குஞ்சு பொரிக்க எண்ணின

அன்புடனே பெண் காகம்
ஐந்து முட்டை இட்டது
ஆசையுடன் காகங்கள்
அடையும் காத்து வந்தன

மாமரத்தின் அடியினில்
மறைந்து வாழ்ந்த பாம்புமே
காகமில்லா வேளையில்
களவாய் முட்டை குடித்தது

ஆசை கலைந்த காகங்கள்
அழுதழுது கரைந்தன
முட்டை குடித்த பாம்பதன்
முடிவைத் தேட எண்ணின

அரசி குளிக்கும் வேளையில்
அவளின் கழுத்து மாலையை
கவர்ந்து கொண்டு வந்ததாம்
காகம் புற்றில் போட்டதாம்



புற்றில் காகம் மாலையை
போடுகின்ற வேளையில்
துரத்தி வந்த தூதுவர்
துடிப்புடனே கண்டனர்

புற்றை அழிக்கும் போதிலே
புஸ்! புஸ்!! சத்தம் போட்டுமே
வெளியே வந்த பாம்பினை
வெட்டிக் கொன்று விட்டனர்.

அன்று முதல் காகங்கள்
ஆனந்தமாய் இருந்தன
கூடிக் கூடித் திரிந்தன
குஞ்சு பொரித்து வாழ்ந்தன


புலவர் பூங்கோதை



Neklar für die Kinder

Nectar pour les enfants

Nectar for the childrens



உண்ண உணவின்றி,
உடுக்க உடையின்றி,
கல்வி அறிவின்றி,
யுத்தம், கலவரங்களால்,
இன்னலுறும் இளம்சிறார்களுக்கு
இச்சஞ்சிகையைக்
காணிக்கையாக்குகின்றோம்.

புனிதமலர் ராஜேஸ்வரன்


"Siruvar Amutham"
Alefstr- 11
50189 Elsdorf
GERMANY
02271 / 66527